Registered as a News Paper

மக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 31 (13 06 - 1992) சனிக்கிழமை ஓசை: 116

## மீனவர்களுக்குஒய்வூதியம் தமிழர்கள் புறக்கணிப்பு

திருக்கோணமலை மாவட்டத்தில் மீனவர்களுக்கான ஒய்வூதியம் வழங்கும் சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டத்தில் தமிழ் மீனவர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த சிறிலங்கா அரசுமுயன்று வருகின்றது. திருக்கோணமலையிலுள்ள மீன்பிடித்துறைமுக அமைச்சகம் சிங்களவர்களினதும், முஸ்லிம்களினதும் பெயர்களை மட்டுமே பதிவுசெய்து வருகிறது தமிழ் மீனவர்கள் ஒய்யூதியம் வழங்கும் திட்டத்திலிருந்து முறறாகவே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

# தீர்வை முன்வைக்க வேண்டும் இல்லையேல் ராணுவ நடவடிக்கை

## உலக நேரம் திருத்தப்படும்

(நியூயோர்க்)

பூமியின் சுழற்சிக்கு இசைவாக உலக நேரம் இந்த மாதம் 30 ஆம் திகதி திருத்தப்படவுள்ளது.

இதன்படி ஒரு விநாடியால் உலக நேரம் அதிகரிக்கப்படும். 1972 ஆம் ஆண்டு முதல் இந்த லீப் விநாடியின் உலகநேரத்துடன் பதினேழு தடவைகள் முரண்படுக்கொண்டன.

## புலிகளுக்கு பதில் அமைச்சர் மிரட்டல்

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தைமுன்வைக்கப்பட வேண்டும் இல்லையேல் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சிறிலங்கா பதில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா மிரட்டியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இனப்பிரச்சினைத் தீர்விற்கு யோசனை தெரிவிக்குமாறு விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் அழைப்பு விடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்தோடு, சமாதானத் தீர்விற்கு விடுதலைப் புலிகள் இணங்காவிட்டால் பாரிய இராணுவத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்பொழுது பாராளுமன்றத் தெரிவுக்குழு பகிஷ்கரிப்பைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கைவிட்டுள்ளது இந்நிலையில், இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் விடுதலைப் புலிகள் யோசனைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் விடுதலைப் புலிகள் தமது சொந்த யோசனைகளைச் சமர்ப்பித்து தெரிவுக்குழு உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்றும் மேலும் குறிப்பிட்டார்.

## புலிகளுடன் பேச்சுவார்த்தையை தெரிவுக்குழுவே நடத்த வேண்டும்

:- ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை பாராளுமன்றத் தெரிவுக் குழுதான் மேற்கொள்ளவேண்டும் என சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்

வார்த்தைகளை மேற்கொள்கிறது விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சும் இந்தக் குழுவிற்கு உட்பட்ட விடயமே'' என்று தெரிவித்தார்.

வடகிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

## வீரச்சாவு



மேஜர் பாரதி



போரதீவு பகுதியில்

## தமிழ் பொதுமகன் கொலை இருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவு பொருகாமம் என்னும் இடத்தில் வைத்து இராணுவத்தினர் மூன்று பொதுமக்களைக் கைதுசெய்து பின் ஒருவரைச் சுட்டுக்கொன்றுள்ளனர். மற்ற இருவரையும் முகாம் கொண்டுசென்றுள்ளனர்.

கடந்த செவ்வாயன்று பிற்பகல் 2.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர் சீனித்தம்பி கருணாகரன்(வயது 20 கொக்கட்டிச்சோலை) என்பவராவர்.

ஆனந்தராசா சுந்தரலிங்கம் (வயது 20 பழுகாமம்),யோகநாதன் (வயது 20) என்பவர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

## வீரச்சாவு

2-ம் லெப் தமிழீழன்

10-06-92 அன்று காலை 6-30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் கரவெட்டி தில்லன் தோட்டம் என்னும் இடத்தில் இயக்க வேலையாக சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கினர்.

இத் தாக்குதலினால் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார். வீரச்சாவு அடைந்த 2-ம் லெப்டினன்ட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சேந்தான்குளம் பகுதி மோதலில் 4 மணிநேரத்தில் 14இராணுவம்பலி

(கொழும்பு)

வலிகாமம் வடக்குப்பகுதியில் நேற்று முன்தினம் முழுவதும் இடம்பெற்ற பரவலான உக்கிரமோதல்களில் முப்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியுள்ளதாக தெரியவருகிறது.

சுமார் 100 பேர் காயமடைந்துள்ளனர்

நேற்று முன்தினம் சேந்தான்குளம் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற படையின

இதேவேளை வரும்மாதங்களிலும் யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை தொடரும் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பூநகரி கண்ணிவெடி;

## இறந்த அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

பூநகரிப் பகுதியில் கடந்த

ணல் ஆக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழு தான் மேற்கொள்ளவேண்டும் என சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்த அவர், ''வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் விடயத்தை தற்போது பாராளுமன்றத் தெரிவுக்குழு மேற்கொண்டு வருகிறது இந்தக் குழுவிற்கிடையே அரசாங்கம் சமாதானப் பேச்சு

இறது விடுதலைப் புலிகளுட னான சமாதானப் பேச்சும் ... தார்.

வட-கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

## கட்சிகளிடம் ஆலோசனை பெற அரசு விருப்பமாம்

(கொழும்பு)

வடக்குக்கிழக்குப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக அப்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் யோசனைகளைப் பெறுவதில் அரசாங்கம் பெரும் ஆர்வம் கொண்டுள்ளதாக அரசின் முக்கிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என 'தினகரன்' தெரிவித்துள்ளது.

இதற்காகவே சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வரும் 15 ஆம் திகதி மேற்படி அரசியல் கட்சிகளின் மாநாட்டைக் கூட்டவுள்ளார் என்றும்,

இதில் அந்தக்கட்சிகள் தெரிவிக்கும் யோசனைகள், கருத்துக்கள் நன்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட பின்னர் வடக்குக் கிழக்குப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் ஒரு முடிவுக்குவரும் என்றும் அவர் தெரிவித்ததாகத் தினகரன் குறிப்பிட்டுள்ளது

## அரசு-எதிர்க்கட்சி இழுபறி தீர்வு காணப்பட்டுள்ளது

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்க தரப்பினருக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே பாராளுமன்றத்திற்குள் இருந்து வந்த இழுபறி நிலைக்கு தீர்வொன்று காணப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிநாடு சென்றிருக்கும் சபாநாயகர் ஞாயிறு அன்று நாடு திரும்பியதும் பாராளுமன்ற கட்சிகளின் தலைவர்கள் அவருடன் கலந்து பேசி இணக்கமான தீர்வொன்றுக்கு வர மந்திரி சபையில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்ததாகவும் கொழும்பில் இருந்து வரும் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

## சிறிலங்கா விமானப்படைக்கு கோயம்புத்தூரில் பயிற்சி

இந்தியாவின் கோயம்புத்தூர் விமானப் படைத் தளத்தில் இலங்கை பங்களாதேஷ் விமானப்படைகளைச் சேர்ந்தவர்களும் பயிற்சி பெறுகின்றனர் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

## கிராமசேவையாளர் பரீட்சை சமூகமளிக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறுமென அறிவிக்கப்பட்ட கிராமசேவையாளர் போட்டிப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று மாலைவரை யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேரவில்லை. இதனால் மேற்படி பரீட்சையை இன்று திட்டமிட்டபட்ட நேரத்திற்கு ஆரம்பிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது- எனினும் அனைத்துப் பரீட்சார்த்திகளையும் தத்தமது பரீட்சை மண்டபங்களில் தங்கியிருக்கும்படிவேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. அதேவேளை மேற்படி பரீட்சைக்கான வினாத்தாள்களை அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி யாழ். கல்விப்பணிப்பாளர் பரீட்சை ஆணையாளரைக் கேட்டிருக்கிறார். எனவே இன்று வினாத்தாள்கள் வந்து சேருமிடத்து நேரம் பிந்தியே பரீட்சை ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## வீரச்சாவு

### வீரவேங்கைள் கருணானந்தம் பிரணவகுமார்

07-06-1992 அன்று காலை 5-00 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் காரைமடு என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலால் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரச்சாவைத்தழுவிக்கொண்டனர்

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை கருணானந்தம் (சுகதஸ் - முருகுப பிள்ளை குருநதன் ஆயித்திய மலை மட்டக்களப்பு), வீரவேங்கை பிரணவகுமார் (மகேஸ் - பாக்கியராஜா ரவீந்திரன் 7 ஆம் வட்டாரம் நற்பட்டிமுனை) ஆகிய போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் குவேனி



2 ஆம் லெப். பல்லவி



வீரவேங்கை சுரதா

(மன்னார்)

07-06-1992 அன்று மன்னார் மாவட்டம் சிறுநாவற்குளம் இராணுவ முகாம் எல்லைக்குள் தவறுதலாக பிரவேசித்த

(4ஆம் பக்கம் பார்க்க)

...நிருந்துள்ளனர்

நேற்று முன்தினம் சேந்தான்குளம் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற படையினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் முதல் நான்கு மணிநேரத்தில் மட்டும் பதின்நான்கு படையினர் கொல்லப்பட்டனர். என்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி கூறியது.

## வீரச்சாவு

### 2ம் லெப்டினன் கருணாகரன் வீரவேங்கை குமுழவேந்தன்

11-06-92 அன்று சேந்தான்குளம் பகுதியில் நடைபெற்ற கடும் மோதலில், விழுப்புண் அடைந்திருந்த இருவிடுதலைப் புலிகள் போராளிகள் 12-6-92 அன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2-ம் லெப்டினன்ட் கருணாகரன் (நேசன்-பசேசன் பொற்பதி வீதி, கொக்குவில்), வீரவேங்கை குமுழவேந்தன் (நிருபன்-முருகேசன் உஷாந்தன், இல. 21. கண்ணகை அம்மன்கோயிலடி, கோடபாய்-வடக்கு)

## பதவி உயர்வு

(கொழும்பு)

பூனகரிப் பகுதியில் கடந்த புதனன்று பலியாகிய இராணுவ அதிகாரி லெப்டினன் கேர்ணல் சித்திரபுஞ்சிஹேவா என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர் ஒப்பிரேசன் பலவேகய என்னும் ஆனையிறவு மோதலில் முக்கிய பங்கு வகித்தவர் எனவும் இதன்மூலம் பதவி உயர்வு பெற்றவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவரது மரணத்துக்குப்பின் இவருக்கு கேர்ணல் ஆக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சம்பவத்தில் கப்டன் எஸ். கருணாதினா கடற்படையைச் சேர்ந்த லெப்டினன் - அஞ்சனாதிசநாயக்க மற்றும் இரண்டு இராணுவத்தினர் பலியாகியுள்ளனர்.

கண்ணிவெடியில் சிக்கிய ஜீப் வண்டி சுக்குநூறாகச் சிதறியதாகவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வாழைச்சேனை பஸ்ஸில் வழிமறித்துக் கொள்ளை

### இராணுவம் கைவரிசை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஒன்றினை மின்னேரிய இராணுவ முகாமுக்கு அண்மையில் ரி-56 ரக ஆயுதங்களுடன் வழிமறித்து பஸ்ஸைச் சோதனையிடப் போவதாகக் கூறிய இராணுவத்தினர் மூவர் பயணிகளிடம் கொள்ளையிட்டுள்ளனர்.

குற்றவாளிகளைப் பிடிக்க பொலிசார் இராணுவப் பொலிசாரின் உதவியை நாடியுள்ளனர்.

தனியான ஒரு இடத்துக்கு பஸ்ஸைச் செலுத்துமாறு உத்தரவிட்ட அவர்கள் பயணிகளிடமிருந்து 36,000 ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தையும், தங்க நகைகளையும் கொள்ளையடித்துள்ளனர்.

## ரெலோ தேசத்துரோகி சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மண்டூர் துறையடியில் வைத்து ரெலோ தேசத்துரோகி கருப்பன் (பூபால

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வலிவடக்கில் ஷெல் வீச்சு ஒன்பது பொதுமக்கள் காயம்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்குப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதிக் குடிமனைகளை நோக்கி நேற்றுக் காலை 7 மணியளவில் ஷெல் தாக்குதல்களையும் துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர் இதில 9 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

குறிப்பாக இளவாலை, விளான் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தம் வீடுகளையும் உடைமைகளையும பார்க்கச்சென்ற வேளையே இத்தாக்குதல் இராணுவத்தனரால் மேற்கொள்ளப்பட்டன இத்தாக்குவில் விமலாதேவி (33 வயது) உரும்பராய் சிவயோகேஸ்வரசர்மா (31 வயது தெல்லிப்பழை மூர்த்திக்குருக்கள் (33 வயது விளிசிட்டி தெல்லிப்பழை என். பத்தினி (60 வயது) வட்டுக்கோட்டை ரி யோகேஸ்வரன் (14 வயது) சுன்னாகம் ஆகியோரே படுகாயமடைந்தவர்களில் ஐவர் இதைவிட மாலை 6-00 மணி முதல் 7-00 மணி வரையும் மேற்படி பகுதிகளை நோக்கி எறிகணைத்தாக்குதலும், பீரங்கித் தாக்குதலும நடத்தப்பட்டது.

# பாஷையூர் புனித: அந்தோனியார் ஆலய வருடாந்த
# உற்சவ நாள் சிறப்பிதழ்

13 -- 06 -- 1992

## புதுமைகள் பல புரிய அருள் பெற்ற புனித அந்தோனியாரின் ஆலய பெருவிழா பாஷையூரில் இன்று மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது:

## பாஷையூரில் கோவில்கொண்ட பதுவைப் புனிதர்

ஆண்டவன் அருள்பெற்று அமலனைப் பின்பற்றி, உலக வாழ்வை உதறித்தள்ளி பரலோக வாழ்வை விரும்பி வாழ்ந்தோர் பலர். விண்ணுலகம் டைந்து புனிதரானோர் பலர். புனிதராகி மக்களின் வேண்டுதலை ஆண்டவனிடம்சேர்த்து தேவைகளுக்கு உதவி புதுமை செய்தோர் பலர், அவ்விதமாக புதுமை செய்யும் புனிதர்களுள் புனித அந்தோனியார் பக்தர்கள் மத்தியில் முதன்மை பெறுகின்றார். பல்வேறு சமய மக்களாலும் பாராட்டப்படுகின்றார். இன்றைய தினம் உலகமெங்கும் இவருக்கு விழா எடுக்கப்படுகின்றது.

அற்புத வரத்தர் என்றும், புதுமைப் புனிதர் என்றும், கோடி அற்புதர் என்றும், அன்பாக அழைக்கப்படும் இப்புனிதர் யாழ்மண்ணின் பாஷையூரிலும் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளார். அதனால் அலையோடு அலை தழுவி வெண்நுரை பொங்கிக் கரை கொஞ்சும்- கடலாடும் மரக்கலங்கள் கைகோர்த்து விளையாடும்- இதமான காற்று வந்து இனிதாக தாலாட்டும்- பாணன்வழி வந்ததனால்பாவளத்திற்குப் பஞ்சமில்லா வளமான சிற்றூரும் மகிமை பெற்று நிற்கின்றது.

கி.பி. 1195ஆம் ஆண்டு ஆவ

...ன் சபைக்குருமடத்தில் சேர்ந்தார். பெற்றோர் தன்னைத் தெரிந்து கொள்ளாதபடி தன் பெயரை அந்தோனி என மாற்றியமைத்தார்.

குருவாக மாறிய அந்தோனியார் தாழ்ச்சி, பிறரன்பு, கற்புநெறி ஆகியவற்றில் மிகவும் பிரமாணிக்கமாக திகழ்ந்தார். ஆண்டவன் இவர்பால் அளவற்ற அன்பு கொண்டார் ஆண்டவன் வேகாட்டிய பாதையில் ஆர்வத்துடன் நடந்தார். ஆண்டவன் மூலமாக பற்பல அற்புதங்களைச் செய்தார். பிரான்ஸ், இத்தாலி ஸ்பெயின், மொரக்கோ போன்ற இடங்களுக்குச் சென்று யேசுமறையைப் போதித்து பல ஆயிரக்கணக்

கானோரை மனம் திருப்பினார் முப்பத்து ஆறாவது வயதில் ஆண்டவன் இவரைத் தம்மிடம் அழைத்துக்கொண்டார். இறந்து ஒருவருடத்தால் பீடங்களில் வணங்கப் பெறும் பாக்கியத்தை இப் புனிதர் பெற்றிருந்தார்.

கோடி அற்புதங்களைப் புரிந்து வரும் புனித அந்தோனியார் சித்திரத்தேரேறி சிங்காரப்பூமியாம் பாஷையூரில் இன்று 13.6.92 திருவுலா வருகின்றார். அவரது அழகு முகம் காண அருளினைப் பெற்றுக்கொள்ள அணிபணியாகச் செல்வோமாக.

—துஷா பிறேமகாந்தன்

## தமிழ்மக்கள் துயர் துடைப்பாய்!

கடலாடும் கரைகொண்ட பதிதன்னில் குடிகொண்ட
புதுமையின் நாயகனே நின்புகழைப் பாடுதற்கு
ஈய்ந்தருள்வாய் இறையேசு கரம்வேண்டி
நிறைவாக மொழிவளத்தை புதுமையின் நாயகனே!

எம்மக்கள் படும்துயரைப் பார்ப்பார் இல்லையில்லை
எமக்கிங்கு ஆறுதலும், தேறுதலும் தருவாரில்லை
அந்தோனி மாமுனியே அண்டிவந்தோம் நின்பாதம்
தமிழ்மக்கள் துயர்துடைப்பாய் அந்தோனி முனியோரே!

— சுதர்சன்றோசி - பாசெய்யூர்

## பங்குத்தந்தையின் ஆசியுரை

புதுமைகள் பலபுரிய அருள்பெற்ற புனித அந்தோனியாரின் பெருவிழாவை யாழ் மறை மாவட்டத்திலுள்ள பாஷையூர் பங்கில் இன்று கோலாகலமாககொண்டாடும் வேளையில், புனித அந்தோனியாரின் பக்தர்கள் அனைவரும் எங்கிருந்தாலும் இறைவனின் அருளை புனித அந்தோனியார் மூலமாக பெற்று மகிழ்ச்சியுடன் வாழ இறைவனிடம் மன்றாடுகின்றேன்.

அருட் திரு செபமாலை துரம்
அ. ம. தி
பங்குத்தந்தை
பாஷையூர்



பதுவையர் காப்பார்


போட்டோ பிரதிகள், புகைப்படங்களுக்கு
ஞானம் ஸ்ருடியோ
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம.

எஸ். எம். பெர்னான்டோ
கண்ணாடி வழங்குபவர்
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகாமை)
யாழ்ப்பாணம்

செல்வா ஹாட்வெயர்
ஸ்ரோர்ஸ்
217, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

லிங்கம் கூல்பார்
52, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

மொறாயஸ்
மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர்
50, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்தி)
யாழ்ப்பாணம்.

எஸ். எ. லிங்கன்

யாடும்- இதமான காற்று வந்து இனிதாக தாலாட்டும்- பாணன்வழி வந்ததனால்பாவ ளத்திற்குப் பஞ்சமில்லா வள மான சிற்றூரும் மகிமை பெற்று நிற்கின்றது.

கி.பி. 1195ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் அமலோற்பவ அன்னையின் விண்ணேற்பு நாளான்று மாட்டீடன் பிரபு தம்பதிகளின் தவக்கொழுந்தாக லிஸ்பன் நகரத்தில் இந்த லீலிமலர் பிறந்தது. பெற்றோர் இவருக்கு பர்னாந்து எனும் நாமத்தைச் சூட்டி மகிழ்ந்தனர். பதினைந்து அயதை எட்டிய பர்னாந்து வளமான வாழ்வுவாழ வகையிருந்தும் கூட வாழ வேண்டிய வயதில் கிறீஸ்துவுக்காக மாள வேண்டும் என்றபேராவல்பூண்டார் துள்ளித்திரிகின்ற பள்ளிப்பருவத்தில் உலகவாழ்வை வெறுத்து துறவறம் மேற்கொள்ள புனித அகுஸ்தீனார் குருமடத்தில் சேர்ந்து கொண்டார். கோயிம்ரா குருமடத்திலிருந்து ஒலிவாரெஸ் எனுமிடத்திலுள்ள பிரான்சீஸ்

எம்மக்கள் படும்துயரைப் பார்ப்பார் இல்லையில்லை
எமக்கிங்கு ஆறுதலும், தேறுதலும் தருவாரில்லை
அந்தோனி மாமுனியே அண்டிவந்தோம் நின்பாதம்
தமிழ்மக்கள் துயர்துடைப்பாய் அந்தோனி முனியோரே!

— சுதர்சன்றோச் - பாசெய்யூர்

## விழாக் காண்போம்

தாகங்கொள் மேகமது வேக மாகத்
தொட்டுரசித் தொழுதேற்ற எழுந்த கோயில்
ஆகங்கொள் அழல்வினையின் அரும ருந்தாய்
ஆனிபதின் மூன்றாம்நாள் அழகுத் தேரில்
தூபங்கொண் டிகபரத்தோர் துதிகள் பாட
தெள்ளுதமிழ் துள்ளுமிசை தென்றல் தூவ
வேதங்கொண் டாடுசந் தந்தோனி யாரின்
வாரியணை பாஷைநகர் விழாக்காண் போமே.

— பாஷையூர் ''ஆரம்'' —

## உம்பதமே தேடி!

அந்தோனியார், அந்தோனியார், அந்தோனியாரே!
சிந்தாகுலம் தீர்ப்பவரே சிந்தை இரங்குவீர்!
அந்தோனியா ரென்றழைத்ததும் நாடிவருவீர்!
தஞ்சமென்று உம்பதமே தேடி வந்தோம்!
அஞ்சேலென்று எம்மைநீரே காத்தருள்வீர்!

— இரா. அன்ரன்றெக்ஸ்



## பதுவையர் காப்பார்

கத்தனின் திருவருள் பெற்றுத் தாழ்ந்து
கடமை புரிந்து நிதமும் இறைவன்
காதலால் உருகிக் குருவது ஆகிக்
கர்மப் பசாகின் மாய்கையை வென்று
கிறிஸ்து பெருமான் கையதில் வந்து
தங்கி யிருக்கத் தவம்பல செய்த
கீர்த்தி பெற்றோன் நாளொரு கோடி
நவம்பல செய்த நாவலன், காவலன்.

குலமக னாகக் குடிமக னாகப்
பாசெய்யூரு றைந்து பசிபிணி நீக்கி
கூற்றுவ னாங்கு வாராது தவிர்த்துச்
செய்தொழிற் செல்வம் சிறப்புற் றொளிரக்
கெட்டவை யொழித்து மக்களுக் காகக்
கிறிஸ்துவை வேண்டிப் பலவகை யாலும்
கேடுகள் சூழா வண்ணமாய்த் தேரில்
பவனி வருமவர் பதுவையர் காப்பார்.

— இருள் பிலிப்பையா

மலர் ஒழுங்கு: பாசையூர் சுகந்தன்றோச்
தயாரிப்பு: த. பரமலிங்கம்


மூக்குக் கண்ணாடி விநியோகஸ்தர்
50, மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்தி)
யாழ்ப்பாணம்.

எஸ். எ. லிங்கன்
விநாயகா ரேணிங் வேக்ஸ்
202, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எஸ். தோமஸ் குடும்பத்தினர்
பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதீப்வீடியோ மூவிஸ்
31, ஈச்சமோட்டை,
பீச்ரோட், யாழ்ப்பாணம்.

கிறீன்சியஸ் ரெயிலறிங்
இல; 11, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்
தங்கப் பவுண் நகை வியாபாரம்
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வ. செல்லத்துரை
குடும்பத்தினர்
13, மவுண்கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

எஸ். யேசுதாஸன்
குடும்பத்தினர்
107, கடற்கரை வீதி
குருநகர்,
யாழ்ப்பாணம்.

பி(F)ராங் எம்போறியம்
16/38, கஸ்தூரியார், வீதி,
யாழ்ப்பாணம்.

பி. ஐ. பர்னான்டோ
240, ஆஸ்பத்திரி வீதி,
(மருத்துவமனை முன்பாக)
யாழ்ப்பாணம்.


## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சு. கெங்காதரன் (211/1 கோயில் வீதி, நல்லூர் இல. 701563174V) என்பவருடைய அடையாள அட்டை கந்தர்மடத்திற்கும், நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். [2661]

### ஹெரோயின் கடத்தல் பிடிபட்டது

[கொழும்பு]

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கடந்த புதன் வந்திறங்கிய வெளிநாட்டவரொருவர் இருபதுலட்சம்பெறுமதியான இரண்டு கிலோ ஹெரோயினை களவாக கடத்திக் கொண்டுவர முயன்றபோது பிடிபட்டார் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர் இரண்டு கிலோ ஹெரோயினையும் தகரத்தில் அடைக்கப்பட்ட பழங்களுக்குள் ஒளித்து வைத்து களவாக கடத்திக் கொண்டுவர முயன்றபோதே சிக்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவு கூருகின்றோம்... 1992-06-13

1985-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு புல்லுமலைப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப்பிரிந்த -

**வேல்** [குமாரவேல் கோப்பாவெளி, மட்டக்களப்பு]

1987-ம் ஆண்டு வல்வை பொலிகண்டி உப்புக்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடியில் சிறிலங்கா இராணுவத்தினரால் உலக்கையால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ்ப்பொது மகன். மற்றும், பலாலி - மாவிட்டபுரம் பகுதிகளில் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989-ம் ஆண்டு மட்டக்களப்பு தொப்பிகலமலைப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**கேதீஸ்** [குணசேகரம் ஏறாவூர் மட்டக்களப்பு]

1990-ம் ஆண்டு பாணமையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ஜோண்சன்** [சற்குணம் ஜீவராசா பொத்துவில் அம்பாறை]

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய-

**குயிலன்** [பதுளை]

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தமேஷ்** [அக்கரைப்பற்று. அம்பாறை]

**குமரேசன்** [பாலையடி வெட்டை, மட்டக்களப்பு]

**மொனரா** [யோகராசா பொற்செல்வன் மண்டூர், மட்டக்களப்பு)

**கமலன்** [இ.மூர்த்தி ராமனுபுளியங்குளம்]

அம்பாறை கல்முனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**இன்பன்** [அக்கரைப்பற்று, அம்பாறை]

**கோமளராஜ்** [சந்திரசேகரம் 37-ம் கிராமம் அம்பாறை]

மட்டக்களப்பு கும்புறு மூலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**லெப். றொமி** [நாகராசா சகாதேவராசா கொடுவாமடு, மட்டக்களப்பு]

**ஜிவ்றி** [முகமது இலியாஸ் ஓட்டமாவடி மட்டக்களப்பு]

அம்பாறை இறக்காமம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு உதவிப்படை தடுப்பு நிலையத்தில் வீரச்சாவெய்திய-

**சாந்தன்** [சண்முகம் முத்துக்குமார் சேனைக்குடியிருப்பு, மட்டக்களப்பு]

திருக்கோணமலை ஜெயபுரபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2 ம் லெப். சங்கிலி** [சண்முகதாஸ் சதீஸ்குமார் திருக்கோணமலை]

திருக்கோணமலை, உப்புவெளி, 3-ம் கட்டைப்பகுதியில், சிறிலங்கா காவல் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**சுகந்தன்** [விஜயநாதன் சோமாங்கதன் திருக்கோணமலை]

திருக்கோணமலை, கிண்ணியாப்பகுதியில், சிறிலங்கா காவல்நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

**அருண்** [சண்முகம் வீரசிங்கம் பன்குளம், திருக்கோணமலை]

**சீனு** [சதானந்தன் கலைச்செல்வம் கிண்ணியா திருக்கோணமலை]

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் ஜெகன்** [கணபதிப்பிள்ளை இலட்சுமணன் - பன்குளம், திருக்கோணமலை]

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**சதீஸ்** [அக்கரைப்பற்று, அம்பாறை], **தர்சன்** [அப்துல்காதர்சமி-]

அம்பாறையில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் கணவன் மனைவி உட்பட சம்மாந்துறை 4-ம் கொலனி மத்திய முகாம்பகுதியைச் சேர்ந்த 19 தமிழர்கள்: டி.டி.சி தமிழ்க்கிராமம் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தைகள், பெண்கள், சிங்களக்காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட அம்பாறை புகையிரத நிலைய வாசியான நில அளவையாளர்.

கல்லோயாவிலிருந்து மட்டக்களப்புக்கு வரும்போது காணாமல் போன மட்டக்களப்பு புகையிரத நிலைய விடுதிவாசியான தமிழ் இளைஞன்.

1991 ஆம் ஆண்டு வீமன்காமத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எம்மைப் பிரிந்த -

**லெப். தர்சன்** (பரமேஸ்வரன் கிரிதரன் - சித்தன்கேணி, வட்டுக்கோட்டை.)

**வரோதயன்** (கணபதிப்பிள்ளை பரணிதரன்-துன்னாலை தெற்கு, கரவெட்டி)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட உறுகாமத்தைச் சேர்ந்த 2 இளம் பெண்கள், களுவங்கேணியைச் சேர்ந்த பெண், செங்கலடி - 2 ஐச் சேர்ந்த இளைஞன், பெரியபுல்லுமலை, ஈரலிக்குளம் பகுதிகளைச் சேர்ந்த இருவர் ஆகிய 6 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4542)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

வலியதுதான் வாழும் என்பது உலகநியதி. அதனால் வாழவேண்டும் என்பதற்காக வலிமையைப் பேண வேண்டும்.

— யாரோ


# ஈழநாதம்

81, ஸ்டேஷன் வீதி, யாழ்ப்பாணம் 13-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 35


## தமிழினம் வாழ்வதற்காக

புதன், வியாழன் ஆகிய இருதினங்களிலும் வலிகாமம் வடக்கிலும், வடமேற்கிலும் சிறிலங்கா ஆயுதப் படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களினால் சுமார் 15க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர் 100க்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்தார்கள். நூற்றுக் கணக்கான வீடுகள் அழிந்தன ஆலயங்கள், ஆஸ்பத்திரிகள் பொது ஸ்தாபனங்கள் சிதைந்தன. கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான உடைமைகள் நாசமாக்கப்பட்டன.

இதேவேளை, "வடக்கில் தனது சகல ஆயுதளபாடங்களையும் பயன்படுத்தி எத்தனை புலிகளைக் கொல்ல முடியுமோ அத்தனை புலிகளைக் கொல்வதே அரசாங்கத்தின் திட்டம் என முப்படைகளின் கூட்டுப் படைத் தலைமையகப் பேச்சாளரான கேணல் முனசிங்கா பத்திரிகையாளரிடம் தெரிவித்தார், கேணல் முனசிங்கா குறிப்பிட்டது போன்று, கடந்த இருதினங்களிலும் நடந்த போரில் சிறிலங்கா ஆயுதப் படையினர், தமது முப்படைகளினதும் வளத்தையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தினர் என்பது உண்மைதான். ஆனால், புலிகளுக்கு எதிரானபோர் என்பதைவிட தமிழ் மக்களுக்கு எதிரான போராக, தமிழர்களில் எத்தனை பேரைக்கொல்ல முடியுமோ. அன்றிக் காயப்படுத்த முடியுமோ அத்தனை பேரைக் கொல்லவும் காயப்படுத்துவதுமே இலக்காகக் கொண்டிருந்தது என்பதே உண்மை.

# குடும்பப் பதிவு அட்டைகளில் திருத்தம் செய்ய சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் வாழும் குடும்பங்களைப் பதிவுசெய்தல் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளில் பல தவறுகள் யாழ். அரச அதிபர் செயலகத்தினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

பல குடும்பத் தலைவர்கள் தமது குடும்ப அங்கத்தவர் அனைவரையும் பதிவுசெய்யாமல் விட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்படியான குடும்பத் தலைவர்கள் மேல் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பாகத் திருத்திக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் யாழ் செயலகத்தினால் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

தமது குடும்ப அங்கத்தவர்களைப் பதிவுசெய்துகொள்ளத் தவறிய குடும்பத் தலைவர்கள் தத்தமதுபகுதிக் கிராம சேவையாளர்களுடன் உடனடியாகத் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளும்படி யாழ். செயலகம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இந்தத் திருத்தப் பதிவு நடவடிக்கைகள் பின்வருமாறு மேற்கொள்ளப்படவுள்ளது.

1) ஏற்கனவே குடும்பங்களுக்கு வழங்கிய குடும்ப பதிவு அட்டை கிராம சேவகரால் மீளப் பெறப்பட்டு இரத்துச் செய்யப்படும்.

2) புதிய குடும்பப்பதிவு அட்டைபுதிய விபரங்கள் யாவற்றையும் உள்ளடக்கியதாக கிராம சேவகர்களால் தயாரிக்கப்பட்டு அதில் ஒரு பிரதி குடும்பத் தலைவருக்கு வழங்கப்படுவதோடு மறுபிரதி ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்ட குடும்ப அட்டையுடன் இணைக்கப்பட்டு குடும்பப் பதிவுசெயலகத்திற்குஉடனடியாக உதவி அரசாங்க அதிபர் மூலம் அனுப்பப்படவேண்டும்.

3) புதிய குடும்ப அட்டையினை வழங்கும்போது அக்குடும்ப அட்டைக்கு முந்திய குடும்ப அட்டையின் தொடர் இலக்கமே வழங்கப்பட வேண்டும்.

4) குடும்ப அட்டையின் பின் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப அங்கத்தவர்களில் பெண்களின் எண்ணிக்கை அட்டையின் முன்பக்கத்தில் கேட்கப்பட்டுள்ள குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை என்ற இடத்தில் சரியான இலக்கத்திலும், எழுத்திலும் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

5) எக்காரணம் கொண்டும் அழித்த, வெட்டிய, ஒரே இடத்தில் மீளவும் எழுதிய தெளிவற்ற அட்டைகள் செல்லுபடியற்றவையாகவே கருதப்பட வேண்டும். அவையும் குடும்பப்பதிவு செயலகத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

6) தொழில்கள் தெளிவாக எழுதப்படவேண்டும். வீட்டுப் பெண் என்றோ, மாணவர் என்றோ, மேசன், தச்சன், கடைக்கூலி, விவசாயக்கூலி, சிறு வர்த்தகம், இளைப்பாற்றுச் சம்பளம், என தொடர்பானவை குறிப்பிடவேண்டும்.

7) இடம்பெயர்ந்து தொழில் இழந்தவர்களைப் பொறுத்தவரை தற்போது தொழில் இல்லாதுவிடின் கடைசியாக செய்த தொழில் கட்டாயமாக எழுதப்படவேண்டும்.

8) முன்பு வழங்கப்பட்ட குடும்ப பதிவு அட்டையை மீளப் பெற்று புதிய அட்டை வழங்கப்படும்போது இவ் அட்டைகளுக்கான செலவுத் தொகையாக ரூபா இருபது கிராமசேவையாளரால் குடும்பங்களிலிருந்து திரட்டப்பட்டு குடும்ப பதிவு செயலகத்திற்கு உரிய அட்டைகளுடன் அனுப்பப்படவேண்டும்.

9) வெளி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் வசிக்கும் மக்களுக்கான குடும்ப பதிவு அட்டைகளை வழங்குவதற்காக முதலில் அவர்களின்விபரங்கள் திரட்டப்பட்டு அவை குடும்ப பதிவு அட்டை செயலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே கிராம சேவையாளரினால் குடும்ப பதிவு அட்டை வழங்கப்படலாம்.

10) இதுவரையும் குடும்ப பதிவு அட்டையை பெறுவதில் அக்கறை காட்டாதவர்கள் புதிதாக அட்டையைக் கோரும் போது குடும்பபதிவு அட்டைக்கான செலவுத் தொகையான ரூபா பத்து செலுத்த வேண்டும்.

11) மேற்படி விடயங்கள் தொடர்பாக கிராமசேவையாளர்களின் பூரண ஒத்துழைப்பை செயலகம் நாடியிருப்பதுடன், மேற்படி விடயங்கள் யாவும் 20-06-92 க்கு முன்பாக நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வவுனியா பல்கலை. கல்லூரி செயற்பாட்டில் முட்டுக்கட்டை

[வவுனியா]

விரிவுரையாளர்கள் பற்றாக் குறையினால் வவுனியா பல் கலைக்கழக கல்லூரி முழுமையான செயற்பாடு இன்றி காட்சியளிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல ஒவ்வொரு கற்கைநெறித்துறையிலும் மாணவர்களின் எண்ணிக்கை வெகு குறைவாகவே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமாக இருப்பதனாலும் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இறுதியில் கற்கைநெறி வாய்ப்பை முழுமையாக பெற இயலாமையுமே இவ் பல்கலைக்கழக கல்லூரி செயல் இழக்க காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜூலை முதல் தேதியன்று இரைச்சல் போராட்டம்

(கொழும்பு)

எழுப்புவர் என்றும் அவர்

## பனாமாவில் புஷ்ஷின் கூட்டத்தை மக்கள் கூச்சலிட்டு குழப்பினர்

பனாமா சென்ற அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அங்கு மக்களிடையே உரையாற்ற முடியாமல் திரும்பினார். அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சும், பனாமா அதிபர் என்டாராவும் பேசவிருந்த கூட்டத்தில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தியதைத் தொடர்ந்து பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும், தடியடிப்பிரயோகமும் நடத்தினர். ஜனாதிபதி புஷ் பேசவிருந்த கூட்டம் தடைப்பட்டது

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் பிரேசிலில் நடக்கும் புவி உச்சி மாநாட்டிற்கு செல்லும் வழியில் பனாமா சென்று அங்கு 1989ல் ஜெனரல் நொறீகாவைப் பதவி இறக்கிய சம்பவத்தைப் பாராட்டிப் பேச ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

கூட்டம் குழம்பியதையடுத்து பொலிசார் அமெரிக்க அதிபரையும், பனாமா அதிபரையும் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

## தி. மு. க. பேரணி

[சென்னை]

கட்டப்பொம்மன்கோட்டை தோரண வாசலில் உள்ள

## ரஷ்யாவில்

## ரூபிள் நோட்டு தட்டுப்பாடு

காயப்படுத்த முடியுமோ அத்தனை பேரைக் கொல்லவும் காயப்படுத்துவதுமே இலக்காகக் கொண்டிருந்தது என்பதே உண்மை.

கடந்தமாத இறுதியில், சிறிலங்கா விமானப்படையினர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீதுமேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலை வடக்கில் இருந்த சகல மதத்தினரும், நிறுவனத்தினரும் மத வேறுபாடு இன்றி கண்டனம் தெரிவித்தனர். தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் பொருட்டு பேரணி ஒன்றையும் நடத்தினர் சிறிலங்கா ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பினர். அத்தோடு பல மதஸ்தாபனங்களும், நிறுவனங்களும் தனிப்பட்ட ரீதியில், சிறிலங்கா ஜனாதிபதிக்கு மகஜர்கள் மூலம் தமது ஆட்சேபனைகளையும், கோரிக்கைகளையும் தெரிவித்திருந்தனர்.

ஆனால் இவ்வளவும் இடம் பெற்று ஒருவாரம் கூட ஆகாத நிலையில், மீண்டும் ஆலயங்கள் மீதும் ஆஸ்பத்திரிகள் மீதும் சிறிலங்கா இராணுவம் தனது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தியுள்ளது ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து மக்களை வீடுகளுக்குள் இருக்குமாறு பணித்துவிட்டு வீடுகளின் மீது குண்டு வீசி மக்களை அழித்துள்ளது.

இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கம் புலிகளுக்கு எதிராகப் போர் நடத்துகின்றதா? தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் நடத்துகின்றதா? இவ்வாறான ஒரு கேள்வியை எழுப்ப வேண்டிய ஒருநிலையும், தேவையும் இருக்கின்றது. ஆனால், இதுஒருபுதியகேள்வியும் அல்ல. மேலும் இதுசிறிலங்காஅரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிக்காட்டுவதற்கான கேள்வியும் அல்ல. ஏனெனில் சிறிலங்கா அரசாங்கம் புலிகளைத் தமிழ் மக்களிடம் இருந்து வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. அது பேச்சளவில் மட்டுமே. சிறிலங்கா அரசின் இந்நிலைப்பாடு குறித்து அரசிற்கும் அனேக தமிழ் மக்களுக்கும் குழப்பமில்லை.

ஆனால் இக்கேள்வி எழுப்பப்படுவது இன்னமும் சிறிலங்கா அரசாங்கம் தமிழர் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து விடத் தயாராக இருக்கின்றது என்று அங்கலாய்ப்புப் படுபவர்களுக்கே இவ்வருட ஆரம்பத்தில் இருந்து சற்று இராணுவ நடவடிக்கை தளர்ந்திருந்தமை சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட பின்னடைவினாலும், குழப்பத்தினாலேயுமே ஒழிய சிறிலங்கா அரசாங்கம் இராணுவ அணுகுமுறையைக் கைவிட்டதினால் அல்ல. இதை அனைவரும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதானால் எப்பொழுதோ சிறிலங்கா அரசாங்கம் தீர்வு கண்டிருக்கும். ஆனால், சிங்களப் பேரினவாதம் அதை அனுமதிக்கப் போவதில்லை.

சிறிலங்கா பௌத்த பேரினவாதிகளுக்கு என்றுமே தமிழர்களின் பிணங்களே தீனியாகத் தேவைப்படுகின்றது. தமிழரைப் படுகொலை புரிந்து, அவர்களின் பொருளாதார வாழ்க்கையைச்சிதைத்து, கலாசாரத்தை அழித்து விடவே சிறிலங்கா பேரினவாத அரசாங்கம் தனது இராணுவத்தை ஏவியுள்ளது.

மேலும் தமிழ் மக்களின் எந்த ஒரு அபிப்பிராயத்தையும் செவிமடுக்கவோ, அன்றி அவர்களைச் சம அந்தஸ்துள்ள பிரஜைகளாகக் கருதவோ அன்றி நடத்தவோ சிறிலங்கா அரசாங்கம் தயாராக இல்லை. இன அழிப்பே அதன் குறிக்கோள். இந்நிலையில் தமிழினம் தப்பி உயிர் வாழ வேண்டுமானால் போராடுவதைத் தவிர வழியில்லை. மண்டியிட்ட இனங்கள் எப்பொழுதும் உயிர் வாழ்ந்ததாக இல்லை.

---

## இரைச்சல் போராட்டம்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் நாடுதழுவிய ரீதியில் 'எதிர்ப்பு இரைச்சல்' எழுப்பும் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளன. இந்த எதிர்ப்பு நடவடிக்கை வரும் ஜூலை முதலாம் திகதி நடைபெறும். அன்றைய தினம் நண்பகல் 12-35 முதல் குறைந்தது 15 நிமிடங்களுக்கு இந்த இரைச்சல் மேற்கொள்ளப்படும்.

சுதந்திரக் கட்சி அம்பாந்தோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தராஜபக்ஷ இதனை தெரிவித்தார். இது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பாதயாத்திரையை விட வெற்றிகரமாக அமையுமென்றார்.

குறிப்பிட்ட நேரத்தில் கார்கள் ஹார்ன்ஒலியை எழுப்பும். சைககிள் சவாரி செய்வோர் மணியை அடிப்பார்கள், குடும்பத் தலைவிகள் சமையல் பாத்திரங்கள் மூலம் ஒலியை எழுப்புவர் என்றும் அவர் தெரிவித்தார். இவற்றுடன் வணக்கஸ்தலங்களில்அந்நேரத்தில் மணிகள் ஒலிப்பதுடன் வெடிகளும் கொளுத்தப்படும். ரயானும் தட்டப்படும்.

## வெளிநாட்டு சிறைகளில் இலங்கை மீனவர்

(கொழும்பு)

இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகளின் சிறைச்சாலைகளில் அறுபது முதல் எழுபதுவரையான மீனவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர் என்று கம்பஹா மாவட்ட ஐ தே.க.எம் பி. சரத்சந்திரகுணரத்தின தெரிவித்துள்ளார்.

இவர்களை விடுவிப்பது தொடர்பாக வெளிநாட்டமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர்கேட்டுள்ளார்.

## பாராளுமன்ற தெரிவுக்குழு; சுதந்திரக்கட்சி பங்குபற்றும்

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் பாரர்ளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இதற்கான தீர்மானம் கடந்த புதன் மாலை கொழும்பில் நடந்த இக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

## சார்க் சபாநாயகர்களின் மாநாடு கொழும்பில்

(கொழும்பு)

'சார்க்' நாடுகளின் சபாநாயகர்கள் மாநாடு வரும் 15 ஆம் 16ஆம் திகதிகளில் கொழும்புபாராளுமன்றத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ், பூட்டான், பாகிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகளின் பாராளுமன்ற சபாநாயகர்களும் பாராளுமன்ற பேராளர்களும் இந்த மகாநாட்டில் கலந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நியமனத்திற்கான பரீட்சை ஆகஸ்டில் நடைபெறும்

பட்டதாரி பயிலுநர் ஆசிரியராகக்கடமையாற்றுவோருக்கும், பட்டதாரி அல்லாத ஆசிரியர்களாக நியமனம் பெற்று சேவைக்காலத்தின் போது பட்டம் பெற்றவர்களுக்கும், நிரந்தரபட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான பரீட்சை வரும்ஆகஸ்ட் மாதம் நாடெங்கிலும் நடத்தப்படும் என்றுகல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பரீட்சையில்கல்வியியல், வரலாறு மொழி ஆகிய மூன்று பாடங்களுக்கும் பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்.

## கிராமசேவையாளர்பதவிக்கு பெண்களும் விண்ணப்பம்

பெண்களும் கிராம சேவையாளர்களாக நியமனம் பெற விரும்பி விண்ணப்பித்துள்ளனர். நடக்கவிருக்கும் கிராம சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் 68,000 பரீட்சார்த்திகளில் பெண்களும் அடங்குவர்.

---

## பேரணி

[சென்னை]

கட்டப்பொம்மன்கோட்டை தோரண வாசலில் உள்ள கருணாநிதியின் பெயர் நீக்கப்பட்டுள்ளது. இதைக் கண்டித்து நெல்லையிலும், தூத்துக்குடியிலும் தி. மு. க. ஆதரவில் பேரணி கடந்த வாரம் இடம்பெற்றது.

இது தொடர்பாக வை. கோபாலசாமி விடுத்த அறிக்கையில் ஜெயலலிதா செய்த சதியே கலைஞர் மு. கருணாநிதி பெயர் நீக்கம் என்று குறிப்பிட்டுக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

## ஜெயலலிதாவின் மீது எம்.ஜி.ஆர். அவநம்பிக்கை

ஜெயலலிதா மீது எம். ஜி ஆர். அவநம்பிக்கை கொண்டிருந்தார் என்று லெப். ஜெனரல் திபேந்தர் சிங் எழுதியுள்ள நூலில் குறிப்பிட்டு உள்ளார். இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதிகளில் ஒருவரான திபேந்தர்சிங் ஐ. பி. கே. எவ் இன் சிறிலங்கா என்ற தலைப்பில் எழுதிய நூலில் இது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்;

விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளராய் இருந்த தமிழக முதல்வர் எம். ஜி, ராமச்சந்திரனை இராணுவத் தளபதி என்ற வகையில் நான் சந்தித்தேன். அவரும், அவரது மனைவி ஜானகியும் என்னை மிகவும் அன்புடன் வரவேற்றனர். பின்பு அவர் சிகிச்சை பெறுவதற்காக அமெரிக்கா செல்ல இருந்த போது நான் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது பிரியாவிடையைத் தெரிவித்தேன். அப்போது இலங்கை விவகாரம் சம்பந்தமாக நீங்கள் இல்லாத இடத்திற்கு ஜெயலலிதாவுடன் தொடர்பு கொள்கிறேன் என்று நான் கேட்டதும், அவர் வேண்டாம் எனக் கூறினார். நான் அதிர்ச்சி அடைந்தேன், ஜெயலலிதாவுடன் இது பற்றித் தொடர்பு கொள்ள வேண்டாம் ராமச்சந்திரனுடன் பேசுங்கள் என்று தெரிவித்தார்.

இதன் மூலம் ஜெயலலிதாவில் அமரர் எம்.ஜி இராமச்சந்திரன் கொண்டிருந்த அவநம்பிக்கை புலனாகியது.

## ராமதாஸ் விடுத்த

## புலிகள் ஆதரவு அறிக்கை பற்றி எதுவும் தெரியாது

### -காவல்துறை ஆணையாளர்

[சென்னை]

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் புலிகளை ஆதரித்து எந்தவொரு அறிக்கையும் விடுத்தது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று சென்னை பொலிஸ் ஆணையாளர் ஆர் ராஜகோபாலன் கூறினார்.

சட்டவிரோத மற்றும் சீர்குலைவுகள் நடவடிக்கைகள் கடுப்புச் சட்டத்தின் [தடா] கீழ் ராமதாஸுக்குஎதிராக நடவடிக்கை எதுவும் ஏன் எடுக்கவில்லை என வாராந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் ஆர். ராஜகோபாலனிடம் கேட்கப்பட்டது.

சென்னையில் ராமதாஸ்அத்தகைய கருத்தெதையும் தெரிவிக்கவில்லை என்று ராஜகோபால் பதில் கூறினார்.

சென்னையில் பத்திரிகையாளர் மகாநாடொன்றில் புலிகளை ஆதரித்து டாக்டர்ராமதாஸ் கருத்துக்கூறியிருந்ததை செய்தியாளர்கள் ராஜகோபாலனிடம் சுட்டிக்காட்டியபோது எனது கவனத்துக்கு இது கொண்டு வரப்படவில்லை. எனது புலனாய்வு அதிகாரிகளும் இது குறிதது எனக்கு அறிவிக்கவில்லை என்றுபதிலளித்தார்.

---

## ரூபிள் நோட்டு தட்டுப்பாடு வேலைநிறுத்தஅச்சுறுத்தல்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் ரூபிள் தட்டுப்பாடு காரணமாக வேலை நிறுத்த அச்சுறுத்தல்கள் தலை தூக்கி யுள்ளன. ரஷ்யாவின் கைத்தொழில் நகரில் ரூபிள் நோட்டுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் சோவியத் யூனியனில் இனக் கலவரங்கள் தலைதூக்கியுள்ளன. எதிர்வரும் ஜூன் 20ம் திகதிக்கு முன் தமக்குரிய சம்பளப் பாக்கியை ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் அரசாங்கம் தர மறுத்தால் கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவாக ஏனைய சுரங்கங்களில் பணிபுரிவோரும் வேலை நிறுத்தத்தில் குதிப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் தென்பகுதி பாஸ்கிரியா பிராந்தியத்திற்கு அவசரமாக கோடிக்கணக்கான ரூபிள் நோட்டுக்களைத் தரும்படி யெல்சினிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பணம் வழங்கப்படாவிட்டால் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் உள்ளோர் விநியோகத்தை நிறுத்தி விடுவார்கள் எனவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வடபகுதி ஆக்கேன் ஜல்ஸ் பிராந்தியத்தில் அணு சக்தி நீர்மூழ்கிகள் மற்றும் இராணுவத்திற்கு தேவையான உபகரணங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கும் ரூபிள் தட்டுப்பாடு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரூபிள் நோட்டுத் தட்டுப்பாட்டால் எண்ணெய் விநியோக வேலைகள், இராணுவத்திற்கு தேவையான ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகளும் செயலிழந்துள்ளன.

பல பகுதிகளில் கடந்த ஆண்டு இடம் பெற்ற பொருளாதார பரவலாக்கல் காரணமாக ரஷ்ய மத்திய வங்கி ரூபிள்நோட்டுக்களைஉற்பத்தி செய்ய இயலாது தவிக்கின்றது.

## பெண் நீதிபதி நியமனம்

[டில்லி]

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக முதல் தடவையாக பெண்மணி ஒருவர் நேற்று முன்தினம் முதல் நியமிக்கபபட்டுள்ளார். திருமதி காந்தகுமாரி பட்டுநாகர் என்பவரே இந்நியமனத்தை பெற்றவர் ஆவார். இவர் முன்பு ராஜஸ்தான் மாநில உயர்நீமமன்ற நீதிபதியாக கடமையாற்றியவர்.

ஈழநாதம்

# முல்லை இராணுவ நடவடிக்கை பொது மக்களுக்கு பெரும் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் மேற்கொண்டு வரும் ''சத்யவா'' இராணுவ நடவடிக்கைகளினால் அப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் பெரும் பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளனர்.

உடுப்புக்குளம், உப்புமாவெளி, முறிப்பு பகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களும், 1990 இல் முல்லைத்தீவு இராணுவத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து இப்பகுதியில் தங்கியிருந்த மக்களும், அலம்பில், செம்மலை குமுழமுனை ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வந்த மணலாறு மாவட்ட மக்களும், பலாலி, மயிலிட்டி, உடப்பு ஆகிய பகுதிகளிலிருந்து கரைவலைத்தொழிலுக்கென வந்த தொழிலாளர்களுமாக சுமார் 2000 குடும்பங்கள் உடுத்த உடுப்புடன் வெளியேறியுள்ளனர்.

இவர்கள், முள்ளைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இம் மக்கள் அனைவருக்குமான உடனடி உணவுத் தேவையை பொது ஸ்தாபனங்கள் இளையம் கவனித்தது. ஒட்டுசுட்டானில் உடனடித் தேவையை உள்ளூர் அமைப்புக்கள் கவனித்தன.

கடந்த இரு வருடங்களாக உலர் நிவாரணம் இன்றி வாழ்ந்த உடுப்புக்குளம், உப்புமாவெளி முறிப்பு கிராம மக்களுக்கு தொடர்ச்சியான உலர் நிவாரணத்தைகொடுப்பதற்கு முல்லைத்தீவு அரச அதிபர் இணங்கியுள்ள போதிலும்,

ஏற்கனவே நிவாரணம் பெற்று வந்தாலும் உடனடிப் பாதிப்புக்குள்ளான மணலாறு முல்லைப் பிரதேச மக்களுக்கு ஒரு நேர சமைத்த உணவைத் தானும் தர அரசு மறுத்துள்ளது அத்துடன் அரச ஊழியர், ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் உடப்பிலிருந்து இங்கு தொழில் செய்ய வந்தவர்கள் ஆகியோருக்கு எவ்வுதவியும் செய்ய முடியாதென கையை விரித்துள்ளது.

இதனால் இம் மக்களுக்கு குறுகிய காலப்பகுதிக்குரிய உணவுத்தேவையைப் பூர்த்தி செய்ய, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், மனித முன்னேற்ற நிலையம், முல்லைத்தீவு செஞ்சிலுவைச்சங்கம், சர்வோதயம் ஆகியன முன்வந்துள்ளன.

இருந்த போதிலும், இடம்பெயர்ந்த இம்மக்களது சொத்தழிவு கணக்கிடப்படமுடியாததாகும். ஈடு செய்யப்பட முடியாததாகும். சமையற் பாத்திரங்களை மட்டுமல்லாது, உடுபுடைவைகள் ஈறாக இராணுவத்தரப்பினரால் டிராக்டர்களில் ஏற்றப்பட்டதாக நேரடியாகக் கண்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஒலைக்கொட்டில், கல்வீடு, தென்னை, வேம்பு என்றாற்போல வித்தியாசமின்றி அகப்பட்ட வற்றையெல்லாம் துவசம் செய்து கொண்டு பதினைந்திற்கும் மேற்பட்ட சிசபவல் வாகனங்கள் உடுப்புக்குளம், உப்புமாவெளி, அலம்பில் கிராமங்களை ஊடறுத்துச் சென்றுள்ளன.

ஒவ்வொன்றும் சுமார் பத்து லட்சம் பெறுமானமுள்ள கரைவலை அணியங்கள் இருபதிற்கு மேற்பட்டவை இக்கரையோரப் பகுதியில் எம்மக்களால் கைவிடப்பட்டுள்ளது மண்கிண்டி மலையிலிருந்து வந்த ''ஆனையிறவு'' செல்வின்தாக்குதலுக்கு ஒரு கரைவலைத் தொழில் உள்ளானதைத் தொடர்ந்து போட்டது போட்டபடியே மக்கள் வெளியேறினர்.

ஒரு காலமுமில்லாதவாறு தண்ணிமுறிப்பில் இம்முறை சிறுபோக விளைச்சல் அமோகமாக இருந்தது. அறுவடை முடிந்துள்ள போதும் 70% நெல் களத்தில் ''போர்'' (சூடு) வைத்த நிலையிலும், சூடடிக்கப்பட்ட 30% நெல் கடத்தப்பட முடியாமலும் குமுழமுனை கிராமத்தில் கைவிடப்பட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஏற்கனவே, இப் பிரதேசங்களில் செயல்முறைப் படுத்தப்பட்டு வந்த விவசாயத்திட்டங்கள், சுயதொழில் முயற்சிக்கான திட்டம். பாடசாலைகள் அமைக்கும்திட்டங்கள் என்பன யாவும் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது

புதிய T81 T56 இராணுவ பவல் வாகனங்கள் சகிதம் தரை மார்க்கமாகவும், பொம்மர்கள், ஹெலிகொப்டர்கள், Y12, அவ்ரோ, புதிய சுப்பர் ஜெற் போர் விமானங்களின் உதவியோடு ஆகாய மார்க்கமாகவும், வீரசூரியாவின் மேற்பார்வையில் 15இற்கும் மேற்பட்ட போர்ப் படகுகளின் உதவியுடன் கடல் மார்க்கமாகவும் சுமார் 8000 துருப்புக்களுடன் இப்போர் நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

## இந்திய மத்திய அமைச்சருக்கு தமிழகத்தில் கறுப்புக்கொடி

### பாட்டாளி மக்கள் கட்சி ஏற்பாடு

(சென்னை)

மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் இன்று காஞ்சிபுரம் வரும்போது அவருக்குக் கறுப்புக் கொடி காட்டப் பாட்டாளி மக்கள் கட்சி திட்டமிட்டுள்ளது. பொலிசார் தடுப்பு நடவடிக்கையாகக் கட்சியைச் சேர்ந்த 155 தொண்டர்களைக் கைது செய்துள்ளனர்.

தமிழகம்வரும் மத்தியஅமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டப்போவதாக பாட்டாளி மக்கள் கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தது.

காஞ்சிகாமகோடி பீடம் சந்திரசேகரம் சுவாமிகளின் 99-வது பிறந்ததின விழாவில் கலந்து கொள்வதற்கென இன்று அர்ஜுன்சிங் காஞ்சிபுரம் வருகிறார்.

இதேவேளை சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் மகாத்மா கொலை வழக்கை விசாரித்தது போல் ராஜீவின் கொலை வழக்கையும் பகிரங்கமாக விசாரிக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

### நடவடிக்கை கண்காணிப்பு

விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் தீவிரமாக கண்காணிக்கப்படுவதாக காவல்துறை ஆணையாளர் வால்டர் தேவாரம் கூறியுள்ளார். அவர் இலங்கைக்கு எரிபொருள் டீசல், பெற்றோல் என்பன கடத்துவது முற்றாக தடுக்கப்பட்டிருப்பதாகவும் சந்தனக்கட்டை கடத்தலில் பேர்பெற்ற வீரப்பனைக் கைது செய்யும் நடவடிக்கையில் தமிழக சிறப்புக் காவல் பிரிவு ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் சேலத்தில் நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்

### திருநாள்

பிரசித்திவாய்ந்த பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் இன்று 13-6-9) வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

இன்று காலை 6 30 மணிக்கு நடைபெறும் திருநாள் திருப்பலியை யாழ் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஒப்புக்கொடுப்பார்.

திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச் சுரூப தேர்ப்பவனி இடம்பெறும். வழமையில் மாலையில் நடைபெறும்தேர்ப்பவனி தற்காலப் போர்நிலை காரணமாக காலையில் நடைபெறுகிறதென பங்குத் தந்தை வண. செபமாலைதுரம் தெரிவிக்கிறார். சிறப்பிதழ் உள்ளே 2 ஆம் பக்கத்தில்... (21)

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள் திணைக்களம்

### சுருக்கெழுத்தாளர் பதவி

சுகாதார சேவைகள் பணிமனையில் அமைய ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமைகளையுடைய ஆண் / பெண் இருபாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 19.06.92-ம் திகதி அல்லது அதற்கு முன்பாகவோ இப்பணிமனையில் கிடைக்கக்கூடியதாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தகைமைகள்**

01. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
02. வயது :- 18 இற்கும் 40 இற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
03. சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் குறைந்தது விசேட சித்தியுடன் தமிழ்மொழி கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.
04. சுருக்கெழுத்து நிமிடமொன்றிற்கு 75 சொற்களிற்கு குறையாமலும் தட்டச்சு வேகம் நிமிடமொன்றிற்கு 35 சொற்களிற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

**வேதனம்**

நாளொன்றிற்கு ரூபா 55. 20 வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கும் செய்முறைப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும்.

சுருக்கெழுத்தாளராக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுடைய விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

டாக்டர். பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## கே.ஜி பி.யின் நிதி வழங்கல் தற்போது கண்டுபிடிப்பு

(டில்லி)

ஜெருசலேமில் ஒரு பள்ளிவாசல் எரிக்கப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக புதுடில்லியில் அமெரிக்கத் தூதுவரகத்தின்முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு முன்னாள் சோவியத் யூனியனின் உளவுத் தாபனமான கே ஜி பி நிதியுதவி செய்தது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1969 ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் தலைமைப் பீடம் இந்தியாவிலும் சிறிலங்காவிலும் அமெரிக்க எதிர்ப்பு உணர்வுகளைக் கிளப்புவதற்கு கே ஜீ பிக்கு அனுமதி அளித்ததோடு அதற்காக அந்தந்த நாடுகளின் அரசியல் கட்சிகளுக்கு இரகசிய நிதியுதவி வழங்கியும் இருந்தது.

இவ்வகையில் சிறிலங்காவின் ஐக்கிய தேசிய கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கே. ஜி பியிடம் இருந்து பெருந்தொகையிலான நிதியை இரகசியமாகப் பெற்றுக் கொண்டதாக புதுடில்லிப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன

### 4 ஆம் கட்ட நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்தினால் இவ்வாண்டின் ஆனி மாதத்திற்கான 4 ஆம் கட்ட நிவாரணம் நேற்றுமுன்தினம் தொடக்கம் சகல நிவாரணக் கிளைகளிலும் விநியோகம் செய்யப்படுகின்றது.

அமைய எழுதுவினைஞர்

### போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

1992 ஆம் ஆண்டு அமைய எழுதுனர்களாகத் தெரிவு செய்யவென நடைபெற்ற விஷேட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் அனைவரும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நாடாளவியரீதியில் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது

பரீட்சைத்திணைக்களத்தால் நடாத்தப்படவிருக்கும் மத்திய மாகாண சேவையில் எழுதுனர் மற்றும் சமாந்தர தரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான பொதுப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்திபடைய வேண்டுமெனவும் இப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1992-07-03 ஆம் திகதி யெனவும் தெரிவிக்கப்படுகிறது


45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னையின் மடியில்

ரண தரப் பரீட்சையில் ஆகிலம் பாடத்திற் குறைந்தது விசேட சித்தியுடன் தமிழ்மொழி கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

04. சுருக்கெழுத்து நிமிடமொன்றிற்கு 75 சொற்களிற்குக் குறையாமலும் தட்டச்சு வேகம் நிமிடமொன்றிற்கு 35 சொற்களிற்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

**வேதனம்**

நாளொன்றிற்கு ரூபா 55. 20 வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கும் செய்முறைப் பரீட்சைக்கும் தோற்றுதல் வேண்டும்.

சுருக்கெழுத்தாளராக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுடைய விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

டாக்டர். பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதார சேவைகள் பணிமனை,
இல. 57 விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
13/06/92.

(சி/4541)

புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டங்கள் இன்று 13-6-9 ) வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

இன்று காலை 6 30 மணிக்கு நடைபெறும் திருநாள் திருப்பலியை யாழ் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஒப்புக்கொடுப்பார்.

திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச் சுரூப தேர்ப்பவனி இடம்பெறும். வழமையில் மாலையில் நடைபெறும் தேர்ப்பவனி தற்காலப் போர்நிலை காரணமாக காலையில் நடைபெறுகிறதென பங்குத் தந்தை வண. செபமாலைதுரம் தெரிவிக்கிறார். சிறப்பிதழ் உள்ளே 2 ஆம் பக்கத்தில்... (21)

(டில்லி)

ஜெருசலேமில ஒரு பள்ளிவாசல் எரிக்கப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக புதுடில்லியில் அமெரிக்கத் தூதுவரகத்தின்முன்பாகஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு முன்னாள் சோவியத் யூனியனின் உளவுத் தாபனமான கே ஜி பி நிதியுதவி செய்தது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1969 ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் தலைமைப் பீடம் இந்தியவிலும் சிறிலங்காவிலும் அமெரிக்க எதிர்ப்பு உணர்வுகளைக் கிளப்புவதற்கு கே ஜி பிக்கு அனுமதி அளித்ததோடு அதற்காக அந்தந்த நாடுகளின் அரசியல் கட்சிகளுக்கு இரகசிய நிதியுதவி வழங்கியும் இருந்தது.

இவ்வகையில் சிறிலங்காவின் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கே. ஜி பி யிடம் இருந்து பெருந்தொகையிலான நிதியை இரகசியமாகப் பெற்றுக் கொண்டதாக புதுடில்லிப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன

## 4 ஆம் கட்ட நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் இவ்வாண்டின் ஆனி மாதத்திற்கான 4 ஆம் கட்ட நிவாரணம் நேற்றுமுன்தினம் தொடக்கம் சகல நிவாரணக் கிளைகளிலும் விநியோகம் செய்யப்படுகின்றது.

சிவன்வீதியில் அமைந்துள்ள ரொக்க விற்பனை நிலையத்திலும், ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ரொக்க விற்பனை நிலையத்திலும் சீனி 27 ரூபாவிற்கு விநியோகம் செய்யப்படுமென ஊர்காவற்றுறை கூ. ச. பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

**ரெலோ**

பிள்ளை கருப்பையா) என்பவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த புதன்கிழமை மாலை 4. 30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

**வீரச்சாவு தமிழீழன்**

தமிழீழன் (பயஸ் - சிவசம்பு பிரான்சிஸ் வீச்சுகல்முனை மட்டக்களப்பு என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**வீரச்சாவு**

நான்கு பெண் போராளிகள் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்த மேஜர் பாரதி (விஸ்வலிங்கம் சத்தியபாமா கல்லுவம் கரவெட்டி), கப்டன் குவேனி (லட்சுமணன் நகுலேஸ்வரி முழங்காவில் மன்னார்), 2 ஆம் லெப்டினன்ட் பல்லவி (பாலசுப்பிரமணியம் பானுமதி வலந்தலை காரைநகர்) வீரவேங்கை சுரதா (பிரதாப்சிங் சுந்தா பெசன். கந்தையா வீதி, நெல்லியடி, கரவெட்டி) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மேஜர் பாரதியின் இறுதி ஆக்கம் நேற்றைய ஈழநாதம் வெள்ளிமஞ்சரியில் விழுதுகள் பகுதியில் வெளிவந்த கப்டன் அகிலா பற்றிய கட்டுரை ஆகும்.

யில் சித்திய டைந்த பரீட்சார்த்திகள் அனைவரும் எதிர்வரும் ஆவணி மாதம் 5 ஆம் திகதி நாட்டாளவியரீதியில் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது

சைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைய வேண்டுமெனவும் இப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 1992-07-03 ஆம் திகதி யெனவும் தெரிவிக்கப்படுகிறது

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மூத்தவரே முழுமதியே
நித்தம் எம் மனதில் நிற்பவரே



தோற்றம்: 11-7-193

மறைவு: 5-5-1992

## பொ. சோமசேகரம்

வேலணையைப் பிறப்பிடமாக கொண்டவரும், வவுனியாவில் வசித்தவரும் காலஞ்சென்ற வவுனியா வர்த்தகருமாகிய மூ.சி. பொன்னம்பலம் சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வராகிய பொ. சோமசேகரம் 15-5-1992 வட்டக்கச்சியில் காலமானார். ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கு எமது நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டி 13-6-92லும் வீட்டுக்கிருத்தியம் 14-6-1992 வீட்டிலும் (வட்டக்கச்சி) நடைபெறும். அதில் உறவினர்கள் அனைவரையும் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

கட்சன் றோட்,
No 22
வட்டக்கச்சி.

தாய்,
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(சி/4529)

## கண்ணீர் அஞ்சலி



2-ம் லெப். இளந்தேவன்

(தர்மலிங்கம் இராஜேஸ்வரன்)

மலராய்
30 - 07 - 1974

விதையாய்
29 - 04 - 1992

விடுதலைக்காய் வீறுகொண்ட
வீரனே இளந்தேவா
எம் இனத்தின் விடுதலைக்காய்
இச் சிறுவயதில் சீற்றம் கொண்டாய்
எதிரியினை விரட்ட வென்று
நீ ஆனையிறவு முகாம் சென்றாய்
கொடியவரை ஒழிக்க வென்று
நீ முன் நின்று போரிட்டாய்
அஞ்சாமல் நீ நின்று
போரிடும் வேளையிலே
அப்போது குண்டொன்று
உன் நெஞ்சில் பாய்ந்ததடா
எம் மண்ணின் விடிவுக்காய்
உன் குருதி பாய்ந்ததடா
விடுதலையை உணர்த்தி விட்டு
உன் உடல் சாய்ந்ததடா
மாவீரர் வரிசையிலே நீயும்
ஓர் வீரனடா
தமிழ்த் தாய் பெற்றெடுத்த
புதல்வர்களில் ஒருவனடா
தமிழீழம் மலருமடா- அது
வான் வரைக்கும் கேட்குமடா
அப்போது நீ கொண்ட
இலட்சியங்கள் பிறக்குமடா

13- 06- 92 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.

குடும்பத்தினர்.

[2658]

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னையின் மடியில்
12.7.1971

மண்ணின் மடியில்
30.4.1992

### (கப்டன் செந்தில்)

செல்லத்துரை ஈஸ்வரன் (கண்ணன்)

30-4-1992 அன்று தச்சன்காடு இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் செந்திலுக்கும் ஏனையபோராளிகளுக்கும் எமது வீர அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

13-6-92 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளில் இயக்க நண்பர்கள் உட்பட சகலரையும் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

இப்படிக்கு
பெற்றோர், சகோதரர்,
உறவினர்

செருக்கப்புலம் வீதி,
அகிலேஸ்வரன் வீதி,
கொக்குவில் கிழக்கு
கோண்டாவில்

[2663]

## வாகன வரிசை இலக்கம் 12. 06. 1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகனவரிசை இலக்கம்: 4344

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதிவாகன வரிசை இலக்கம்: 3400

இராணுவம் அனுமதித்த இறுதிவாகன வரிசை இலக்கம்: 3393

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்; 28-4545 28-1712, 24-9938, 28-9097 28 3233 41-3931 22-7097, 2_-6972 26-2972, 24-5509 22-8835, 24-9967,

36-8979 76-224, 70-6457, 24 9825 42 1754 41-6933, 26 515, 26-5857, 27-90_0, 24-7884 41-6686, 28 311 26-8854, 25-7591, 36-4000, 37-914, 70-3033.

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்க விபரம்:
26-4393, 28-8589, 28-3141, 24-2545, 26-2737, 42-264 28-9254 42-7312 40 7299, 28 2995, 28-1085, 28-7998 36-1100 36-8284, 25 6807 37-2025, 36-779, 72-58, 71-859.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது